**CC 19/2024 (Old CC No. 163/2014)**

**PW1 – சாமிவேல்** த/பெ கோவிந்தசாமி

27.10.2025
(சாட்சி மனுவின் பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை )

அசா2 பன்னீர்செல்வம் எனது மகன் என்றால் சரிதான். அசா3 அம்பிகா எனது மருமகள் என்றால் சரிதான். அசா4 சேகர் மூன்றாம் நபர் ஆவார் என்றால் சரிதான். எனக்கு எழுத, படிக்க தெரியாது என்றால் சரிதான். நான் கைநாட்டு தான் வைப்பேன் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சாட்சியம் அளிக்கும்போது சம்பவத்திற்கு பின்னர் நான் நேராக மருத்துமனைக்கு தான் சென்றேன் என்றால் சரிதான். அங்கு எத்தனை பேர் என்னை அடித்தார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. நான் மருத்துவரிடம் 7 நபர்கள் என்னை தடியால் அடித்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். புகாரில் சொல்லியுள்ள சங்கதிகள் எதற்காக கொடுத்தேன் என்று தெரியுமா என்றால் தெரியாது. நான் மருத்துமனையில் இருந்தபோது போலிசார் என்னிடம் என்ன நடந்தது என்று கேட்டு எழுதாத வெள்ளை பேப்பரில் கைநாட்டு வாங்கி சென்றார்கள் என்றால் எழுதியிருந்தது ஆனால் கைநாட்டு வைத்தேன். புகாரில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது யார் எழுதினார்கள் என்றும் எனக்கு தெரியாது. புகாரை என்னிடம் படித்து காட்டினார்களா என்றால் இல்லை. மேற்படி எனக்கு தலையில் அடிப்பட்டதற்கு காரணம் கும்பலாக 5 நபர்கள் சேர்ந்து தான் அடித்தார்கள் என்றால் சரிதான். கும்பலாக அடித்ததால் யார் அடித்தார்கள் என்று என்னால் சொல்ல முடியாது என்றால் சரிதான். 1ம் வது எதிரி பழனி என்னை அடிக்கவில்லை என்றால் சரிதான். போலிசார் சொல்லிக் கொடுத்ததன் பேரில் தான் நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**Sd/- (M.C.Arun)**
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்

**CC 19/2024 (Old CC No. 163/2014)**

**PW4 – சேகர்** த/பெ பெரியசாமி

27.10.2025
(சாட்சி மனுவின் பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை )

ஏற்கனவே நான் நீதிமன்றத்தில் சொன்ன சாட்சியங்கள் அனைத்தும் போலிசார் சொல்லிதான் சொன்னேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் சாமிவேல் என்பவரும் இரண்டு மனைவிகள் உள்ளனர் என்றால் சரிதான். சாமிவேலின் முதல் மனைவி பெயர் ஜோதி. சாமிவேலின் 2வது மனைவி பெயர் யசோதா என்றால் ஞாபகமில்லை. மேற்படி சம்பவத்தை பற்றி எனக்கு தெரியுமா என்றால் பஞ்சாயத்து பேசுவதற்காக அசா1ன் இரண்டு மனைவி மற்றும் பிள்ளைகளை அழைத்து வந்தார்கள் அவரை யார் அடித்தார்கள் என்று எனக்கு தெரியாது. எனது முதல் விசாரணையில் 1ம் எதிரி தான் அசா1ன் தலையில் அடித்தார் என்று கூறியுள்ளேன் என்றால் நான் அவ்வாறு ஏதும் சொல்லவில்லை. எனக்கு வயது 69 ஆகிறது என்றால் சரிதான். வயது முதிர்வின் காரணமாக நான் எனது முதல் விசாரணையில் 1ம் எதிரி பழனி என்பவர் அசா1ஐ அடித்தார் என்று தவறாக சாட்சியம் அளித்துள்ளேன் எனக்கு சம்பவத்தை பற்றி எதுவும் தெரியாது போலிசார் சொன்னதான் பேரில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**Sd/- (M.C.Arun)**
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்